REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் '10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 26வ புதன் (11—9—57) ★ வெளியூர்: ஆவணி 27வ வியாழன் (12—9—57) [இதழ் 76

## விவசாயத்திற்கு அமராவதி கால்வாய்த் தண்ணீர்

சென்னை, செப். 11—

1958-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ம்நாள்வரை, அமராவதி கால்வாய்த் தண்ணீர் விவசாயத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கோவை மாவட்டத்தில் 18 கிராமங்களில் உள்ள சுமார் 7,800 ஏக்கர் நிலம் சாகுபடி செய்வதற்கு வசதி ஏற்படும் என்று கருதப்படுகிறது. இந்த நிலங்களில் புன்செய் பயிர்கள் மட்டுமே பயிரிடப்படுமாம்.

# வெள்ளையரின் இனவெறி பலாத்காரமாக உருவெடுக்கிறது!

## நீக்ரோ மாணவர்களை அனுமதித்த பள்ளிக்கூடம் தகர்க்கப்பட்டது

### அமெரிக்காவில் நீக்ரோவர் நிலை

நியூயார்க், செப். 10—

நீக்ரோ மக்களுக்கு எதிராக அமெரிக்க வெள்ளையர்களில் பலர் இன வெறிக்கு ஆளாகி, அட்டகாசங்கள் பல புரிந்துவருகின்றனர்.

இன ஒதுக்கலை விரோதமாக்கும் சட்டங்களைப் பகிரங்கமாக மீறுவதும் சம உரிமை பெற்று பள்ளிகளுக்குச் செல்லும் நீக்ரோ மாணவர்களைத் துன்புறுத்துவதும் அவர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதும் அமெரிக்க ராஜ்யங்கள் சிலவற்றில் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன.

இந்த நிலை இப்போது பலாத்கார உருவெடுத்து கோரத் தாண்டவமாடுகிறது, சில ராஜ்யங்களில்!

டென்னசி ராஜ்யத்தில் நாஷ்விலி என்ற நகரில் நேற்று இரவு ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் வெடிவைத்துத் தாக்கப்பட்டிருக்கிறது; காரணம், இந்தப் பள்ளியில் நேற்றுத்தான் முதன்முதலாக நீக்ரோ மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த வெடி விபத்தில் எவருக்கும் காயம் இல்லாவிடினும் கட்டிடத்தின் ஒரு பெரும் பகுதி இடிந்து தரைமட்டமானதுடன், நூற்றுக்கணக்கான ஜன்னல்களும் கதவுகளும் சேதமுற்றிருக்கின்றனவாம்.

இந்தச் சம்பவத்திற்குச் சில மணி நேரத்திற்கு முன்புதான், நாஷ்விலி நகரின் வேறொரு பள்ளிக்கு நீக்ரோ மாணவர்களை ஏற்றிச்சென்ற கார்கள்மீது கல்லெறி நடத்திய சுமார் 500வெள்ளையர்களைப் போலீசார் கஷ்டப்பட்டுக் கலைத்திருக்கின்றனர்.

இந்த வெடி விபத்துபற்றிக் குறிப்பிடுகையில் உயர்தரப் போலீஸ் அதிகாரி ஒருவர், 'இது வெறும் இன ஒதுக்கல் அல்லது எதிர்ப்புக் கிளர்ச்சி என்ற நிலையைத் தாண்டிவிட்டது. இது, சந்தேகமில்லாமல் சட்டத்தை அவமதித்து மீறும் போக்காகும்' என்று கூறியிருக்கிறார்.

இதுபோன்றே, நீக்ரோவருக்கு எதிரான வெள்ளை இன வெறியரின் ஆர்ப்பாட்டம், அட்டகாசம் எல்லாம் ஆர்கன்சாஸ், பர்மிங்காம், அலபாமா முதலிய தென் இராஜ்யங்களிலும் தலைதூக்கியிருக்கின்றனவாம்!

## ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் திரும்பவும் வேலையில் அமரத் தடை

### கேரள சர்க்கார் உத்தரவு

திருவனந்தபுரம், செப். 10—

"மாநிலத்தில் உள்ள எந்தப் பள்ளியிலும், ஓய்வு பெற்றுவிட்ட ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படக் கூடாது" என்று, கேரள சர்க்கார் உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறார்கள்.

மேலும், சர்க்கார், மற்றும் ஸ்தல நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளில் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதாக 55 நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

# டெல்லியை மீறி அசாம் மேற்கொள்ளும் நடவடிக்கை

## கௌஹாத்தியில் தொழிற்சாலை நிறுவுவதற்கு முஸ்தீபுகள்

### அந்நிய நிபுணர் ஆதரவு பெறத் தூதுக் குழு

புதுடெல்லி, செப். 9—

கௌஹாத்தியில் தாங்கள் நிறுவ உத்தேசித்திருக்கும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைக்கு நிபுணர்களின் ஆதரவைப் பெறும்பொருட்டு அசாம் மாநில சர்க்கார், ஒரு தூதுக் குழுவினை மேலை நாடுகளுக்கு அனுப்பத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இரண்டொரு மந்திரிகளும், சில அதிகாரிகளும் அடங்கும் அந்தத் தூதுக் குழுவினர், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய மேலைநாடுகளுக்கும், ஈரான், ஈராக் போன்ற சில மேற்கு ஆசிய நாடுகளுக்கும் செல்வராம்.

எண்ணெய், மற்றும் எண்ணெய்ப் பொருள்களை அனுப்புவதற்குப் பல்கோக்கு உருக்குக் குழாய்களை உபயோகிப்பது பற்றியும், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை நதிகள் மூலம் பிற இடங்களுக்கு அனுப்புவது பற்றியும் தூதுக் குழுவினர், அன்னிய நாட்டு நிபுணர்களின் கருத்தை அறிவர் என்றும் கூறப்படுகிறது.

# 'சுபாஷ் சாகவில்லை என்பது பகற்கனவே'

## 'முட்டாள்தனமான பிரச்சாரத்தை அரசாங்கம் செய்யாது'

### மக்கள் சபையில் பண்டித நேரு கிண்டல்?

புதுடில்லி, செப். 10—

"இந்தியாவில் உள்ள எல்லோரும் அறிவாளிகள் என்றே அரசாங்கம் நினைக்கிறது; ஆகவே, இந்த முட்டாள்தனமான பிரச்சாரத்தை அரசாங்கம் செய்யாது" என்று, பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நேதாஜி இன்னும் உயிருடன்தான் இருக்கிறார் என்றும், அவர் சாகவில்லை என்றும் திரு. முத்துராமலிங்கத்தேவர் அடிக்கடி கூறிவருவது மக்கள் அறிந்த ஒன்றாகும்.

'இந்தியப் பேரரசு நியமித்த நேதாஜி விசாரணைக் குழு, அது பற்றி ஆராய்ந்து, அவர் இறந்துவிட்டார் என்று அறிக்கையை வெளியிட்டது. இந்திய அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டது; எனவே, நேதாஜி உயிருடன் இருப்பதாகப் பிரச்சாரம் செய்பவர்களை எதிர்த்து அரசாங்கம் பிரச்சாரம் செய்யாது; அவர் உயிருடன் இருப்பதாக இன்னும் கூறுவது பகற்கனவாகும்; மேலும் நாகர் தலைவர் பிசோவுடன் நேதாஜி பேசியதாகக் கூறுவதும் தவறானதாகும்' என்றெல்லாம் பண்டித நேரு கூறியிருக்கிறார்.

# 'கடவுள் பக்தி கொண்டவர்களே பொதுவுடைமைக் கட்சியினர்'

## 'சமயக் குரவர்கள்மீதும் அவருக்கு நம்பிக்கையுண்டு'

### கேரள அமைச்சர் முண்டசேரி அறிவிப்பு

சென்னை, செப். 11—

'கம்யூனிஸ்டுக் கட்சி ஆண்டவனுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடையே பரப்பி வருகிறது என்று கூறுவது தவறாகும். நான் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவன் அல்ல; இருப்பினும், கம்யூனிஸ்டுகள் எல்லோரும் கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள்; எல்லா மகான்களிடமும் மதிப்பு கொண்டவர்கள் என்பதை நான் உறுதியுடன் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆனால் ஆண்டவன் பெயரால், சுரண்டலுக்குக் கம்யூனிஸ்டு கட்சியினர் இடம் தரமாட்டார்கள்." என்று கேரளக் கல்வி அமைச்சர் முண்டசேரி அவர்கள், சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில் நடைபெற்ற (19-வது மலையாளிகள் மாநாட்டில் தலைமை உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

## நாளை!

நங்கவரம் அறப்போர் வெற்றி குறித்த தோழர் மு. கருணாநிதி அவர்களின் அறிக்கை, நாளை (12—9—57) இதழில் வெளிவரும்.

## மீண்டும் பரவினால்!

தஞ்சை, செப். 10—

இரண்டாவதுமுறையாக நச்சுக் காய்ச்சல் என்ற சளிக் காய்ச்சல் பரவினால் அதைத் தடுப்பதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாநில அரசாங்கம் மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாம்.

# 'ஆசாத் காஷ்மீர்'ல் அமெரிக்க இராணுவ அதிகாரிகள்?

## தளம் அமைகிறது! தடியடி தர்பார் ஆரம்பமாகிறது!!

ஸ்ரீநகர், செப். 10—

'பாகிஸ்தான் வசமிருக்கும் ஆசாத்காஷ்மீர்' பகுதியில், அமெரிக்க இராணுவ தளகர்த்தர்கள் வந்து குழுமியிருப்பதாகவும், அந்தப் பகுதியில் வேகவேகமாக ஒரு இராணுவத் தளம் அமைந்துவருவதாகவும் கூறப்படுகிறது.

சித்ரால், கில்ஜித் முதலிய இடங்களுக்கு அமெரிக்க இராணுவ எஞ்சினீயர்கள் வந்துள்ளனராம்.

சித்ரால் என்ற இடம், ரஷ்ய எல்லையில் இருப்பதாகும்; கில்ஜித் என்ற இடமோ சீனாவின் தொழில் வளமிக்க நகரான சிங்கியாங்கிலிருந்து அரைமணி நேரப் பிரயாண தூரத்திலிருப்பதாகும். இந்த இடங்களில்தான் அமெரிக்க இராணுவத்தினர் குவிந்துகொண்டு இராணுவத்தளம் அமைக்கின்றனராம்.

(5-ம் கலம் பார்க்க)

# திரு. எஸ். இராமலிங்கம் மறைவு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மாமனாரும், டாக்டர் விசாலாட்சி அவர்களின் தந்தையாருமான திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் 10-9-57 இரவு 8-45மணிக்கு பூவிருந்தவல்லியில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் சேலத்தில் பெருங்குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே எஞ்சினியரிங் படிப்பை முடித்து, சென்னை மாநிலத்தில் பல இடங்களில் எஞ்சினீயர் வேலை பார்த்தார்.

அவர் நேர்மைக்கும், நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் போனவர்.

இறுதியாக 1943-ம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் முனிசிபல் எஞ்சினீயராக இருந்து ஓய்வு பெற்றார்.

இப்பொழுது அவருக்கு வயது 71 ஆகும்; அவர், மனைவி மாணிக்கத்தம்மாள் அவர்களையும், டாக்டர் விசாலாட்சி, ஞானசுந்தரி, நடராசன் ஆகிய மக்களையும், விட்டுப் பிரிந்துவிட்டார். அவர் சென்ற 1½ ஆண்டுக் காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களும், திரு. எம். எஸ். பிலுகபாணி எம்.ஏ. அவர்களும் அன்னாருக்கு மருமக்களாவர்.

அன்னாரின் பிரிவால் துயருறும் டாக்டர் விசாலாட்சி அவர்கட்கும், அவரது உற்றார் உறவினர்கட்கும், நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆர்.

(1-ம் கலத்தின் தொடர்ச்சி)

கைபர் கணவாய், மக்களின் போக்கு-வரத்திற்கு உபயோகப் படாவண்ணம் மூடப்பட்டுவிட்டது என்றும், அதன் வழியாக போக-வர கடுமையான கிபந்தனைகள், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

### தடியடி

இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக முஜாபராபாத் நகரில் ஒரு பெரும் கண்டன ஊர்வலம் நடைபெற்றது என்றும், அந்த ஊர்வலத்தின்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும், ஊர்வலத்தினர் அமெரிக்கத் தூதுவர் அலுவலகம், ஐ. நா. தகவல் காரியாலயம் இவற்றின்முன் கூடி, அமெரிக்க எதிர்ப்புக் குரல் எழுப்பினர் என்றும், இதன்பேரில் எண்ணற்றோர் கைதாயினர் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—9—57 புதன்

# சர்க்கார் செய்யப் போவது என்ன?

அநியாயமான விலை ஏற்றத்தால் தாங்கமுடியாத வேதனைகளை அனுபவித்துவரும் ஏழை—எளிய மக்களுக்கு, குறிப்பிட்ட ஒரு நியாய விலையில் பிரதான உணவுப் பொருளான அரிசி வழங்கப்படுவதின் மூலம், வேதனைகளைக் குறைக்கமுடியும் என்ற விளக்கத்துடன், தமிழ் நாட்டில் ஆயிரத்திற்கும் சற்று அதிகமான நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன.

ஏழை—எளியோர் அனைவருக்கும் கிடைக்காவிடினும், நல்ல தரமாக இல்லாதிருப்பினும், சிலருக்கேனும் 'நியாய விலை'யில் அரிசி தந்த அந்தக் கடைகள், சிறு பெருமூச்சுவிட ஆறுதல்பெற உதவின; என்றாலும், இந்தக் கடைகளின் தோற்றமும், இயக்கமும், வெளிமார்க்கெட்டில் எவ்வித சலனத்தையும் உண்டாக்கும் சக்தி பெற்றிருக்கவில்லை; விலைகள் இறங்க உதவவில்லை.

உணவுப் பொருள் விலையேற்றத்திற்கான காரண ஆராய்ச்சியில் சில காலத்தையும், கண்டறிந்த காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய யோசனையில் சில காலத்தையும் செலவிட்ட பின்னர், 'நியாய விலைக் கடைகளைத் திறப்போம்; உணவு மண்டலம் உருவாக்குவோம்; விலைகள் தாமாக இறங்குமுகம் காட்டும்' என்றனர், மாநில—மத்திய அரசினர்!

ஆனால், இன்று நிலை என்ன? நியாய விலைக் கடைகள் திறந்திருக்கின்றன; உணவு மண்டலமும் உருவாகியுள்ளது; விளைவு, எதிர்பார்த்த நிலையை எட்டியாவது பார்த்திருக்கிறதா என்றால் இல்லை; எதிர்த் திசையில் சென்று கொண்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்து, நியாய விலைக் கடைகளில், இதுகாறும், நாடிவருவோரில் சிலருக்கேனும் வழங்குவதற்கு டெல்லி சர்க்கார், இறக்குமதி செய்த அரிசியைக் கொடுத்து வந்தனர்.

ஆனால் இப்போது, இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதின் மூலம் அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டியிருப்பதால், இனி, அரிசி இறக்குமதிக்கு வழி செய்வதற்கில்லை என்று டெல்லி தெரிவித்துவிட்டதாம். கோதுமை இறக்குமதி பற்றி தகவல் இல்லை.

அதுமட்டுமல்ல; தமிழ் நாட்டில் நியாயவிலைக் கடைகள் இனியும் நீடிக்க நியாயம் எதுவும் இல்லையாம்! நீடிக்கத்தான் வேண்டுமென மாநில அரசினர் கருதினால், தேவையான அரிசியை தென் உணவு மண்டலத்திற்குள்ளிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டுமாம்! இப்படி, மாநில அரசுக்கு புத்தி சொல்லிவிட்டதாம், டில்லி!

எடுத்த நடவடிக்கைகள் இரண்டு; ஒன்று—நியாய விலைக் கடைத் திறப்பு; மற்றொன்று—மண்டல ஏற்பாடு.

நியாயவிலைக் கடைகள், இப்போது நீடிப்பதா, வேண்டாமா; நீடிக்க இயலுமா, இயலாதா என்ற சர்ச்சைக்கு இடமாகிவிட்டன.

மற்றொன்றான மண்டல ஏற்பாடு, இரண்டு திங்களாகியும், மலர் காய்ச் செடியாகத்தான் இருக்கிறது.

தென் உணவு மண்டலத்தில் உள்ள நான்கு மாநிலங்களில், ஆந்திராவில் மட்டுமே உபரி விளைச்சல் என்று இப்போது கூறப்படுகிறது. ஆனால், இந்தப் புள்ளி விவரங்களைத் தரும் அதே டெல்லி சர்க்கார்தான், 'தமிழ்நாட்டில், தேவையான அளவுக்கு உணவு உற்பத்தி இருப்பதாக, சில காலத்திற்கு முன் அறிவித்திருந்தனர். இதைப் பார்க்கையில் சர்க்கார் தரும் புள்ளி விவரங்களுக்கும் நடைமுறை நிலைமைகளுக்கும் ஒருவகைத் தொடர்பும் இல்லையோவெனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

ஆந்திராவில் உபரியாக, அரிசி கிடைக்கிறது; வியாபாரிகள் தான் கொள்ளை இலாப நோக்கால், கொழுத்துக்கிடக்கும் வடக்கு நோக்குகின்றனர்; இளைத்துத் தவிக்கும் தெற்கு நோக்க மறுக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. ஆனால், அவர்களிடமிருந்து அரிசியைக் கட்டாயமாகக் கொள்முதல் செய்ய மாநில அரசு முற்படாமையால் மத்திய சர்க்கார், நேரடியாக அந்த வேலையை மேற்கொண்டனர். இந்தச் செய்தி வந்து பல நாளாகியும், கொள்முதலின் அளவு, கொள்முதலான அரிசி, அனுப்பிவைக்கப்பட்ட பிரதேசம்பற்றி தகவலே இல்லை.

இப்படி, அரிசி விலையேற்றக் கொடுமையிலிருந்து ஏழை—எளியோருக்குப் பாதுகாப்புத் தருவதற்கெனக் கூறி மேற்கொள்ளப்பட்ட இரு நடவடிக்கைகளும், இதுவரை எவ்வித உருவான பலனையும் தரவில்லை. போதாது என்று, 'நியாய விலைக் கடைகளும் மூடப்படலாம்' எனச் செய்திகள் கிளம்புகின்றன.

இந்த நிலையில், காலங் கடத்தாமல் காரியமாற்ற வேண்டிய மாநில சர்க்கார் என்ன செய்யப் போகிறது?

உணவுப் பொருள் வியாபாரத்தை கொள்ளை இலாபத் தொழிலாகக் கருதி, பதுக்கலில் ஈடுபடுவோர்களைக் கண்டுபிடித்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

மாநிலத்தின் உணவு உற்பத்திச் சக்தி பற்றிய ஒரு சரியான கணக்கெடுப்பு நடத்தி, அந்த அடிப்படையில், சுயதேவைப் பூர்த்திக்கும், உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும் திட்டமிட்டு வழி செய்யவேண்டும். இதற்குக் காலம் பிடிக்கலாம். ஆனால் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலையாகும்.

உடனடியாக, மக்களுக்கு விலை ஏற்றக் கொடுமையிலிருந்து பாதுகாப்புத் தருவதற்காக, நியாய விலைக் கடைகளை நீடிக்க வேண்டும்; அதற்காக, இறக்குமதி செய்தேனும் அரிசி தருமாறு டில்லியை வற்புறுத்துவது உட்பட எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஏழை-எளியோர், கால் வயிறு கழுவவேனும் இயலும்.

# இந்தித் திணிப்புக்கு வன்மையான எதிர்ப்பு இருக்கும்?

## ஆங்கிலம் இந்தியாவின் 15-வது தேசீய மொழியாக இடம்பெறக்கூடும்?

புதுடில்லி, செப். 9—

ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கையைப் பற்றி ஆராய்ந்து, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு முடிவுகளை அறிவிக்க, மக்கள் சபை, மாநிலங்கள் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும் என்று, இந்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த மக்கள் சபையில் தெரிவித்தது நினைவிருக்கலாம். அந்தப் பாராளு மன்றக் குழுவைப் பற்றிய தகவல்கள் மேலும் வெளியாகியுள்ளன.

மக்கள் சபையிலிருந்து 15 காங்கிரஸ் உறுப்பினர்களும், 5 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆக மொத்தம் 20 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்.

மாநிலங்கள் சபையிலிருந்து 7 காங்கிரஸ் உறுப்பினர்களும், 3 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆக மொத்தம் 10 உறுப்பினர் அக்குழுவில் அங்கம் வகிப்பார்களாம்.

மொத்தத்தில் இந்தக் குழுவில் மக்கள் சபையிலிருந்து 20 உறுப்பினர், மாநிலங்கள் சபையிலிருந்து 10 உறுப்பினர்கள்—ஆக 30 பேர் அங்கம் வகித்து, ஆட்சி மொழிக் குழு தந்துள்ள அறிக்கையை ஆராய்ந்து குடியரசுத் தலைவருக்கு முடிவுகளை அறிவிப்பார்களாம்.

இப்போது இந்திய அரசியல் சட்டத்தில 14 மொழிகள் இந்தியாவின் தேசீய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இப்போது அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழுவில் உள்ள ஒருசிலர், ஆங்கிலமும் 15-வது இந்திய மொழியாகச் சிறப்பிடம் பெறச் செய்யப் பாடுபடுவார்கள் என்று டில்லி வட்டாரத்தில் பேச்சு நிலவுகிறது.

இந்தி வெறியர்களுக்கே இந்தக் குழுவில் அதிகச் செல்வாக்கு இருக்கும் என்பது தெரிந்த ஒன்றாகும்.

இருப்பினும், மொழிகளைப் பற்றி நேர்மையான கருத்துக் கொண்டவர்களும், இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்களும் நீதிக்காக நிச்சயம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவர் என்றும் தெரியவருகிறது.

இந்தியை விரும்பாத மக்கள் மீது அதைக் கட்டாயப்படுத்தித் திணிப்பதை எதிர்த்துவந்துள்ள பி. டி. தாணுப்பிள்ளை (மக்கள் சபையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்), டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், வங்க காங்கிரஸ் உறுப்பினரான அதுல்யாகோஷ், பிராங்க் அந்தோணி, ஒரிசா உறுப்பினர் பான்ஜ்தியோ ஆகியோர் இந்தித் திணிப்பைத் தீவிரமாக அக்குழுவில் எதிர்ப்பார்கள் என்று தெரியவருகிறது.

இந்தக் குழு இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் தலைமையில் செயல்படும்.

## முன்னாள் மன்னர்களின்

### வெளிநாட்டுச் சொத்துக்கள்

தகவலை அறிவிக்க இயலாதாம்

புதுடில்லி, செப். 10—

முன்னாள் மன்னர்களின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பற்றிய தகவலை அறிவிக்கமுடியாது என்று மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் பந்த் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை வெளியிடுவது பொதுமக்கள் நலனைப் பாதிப்பதாகுமாம்!

சொத்துரிமை பற்றிய தகவல்களைச் சம்பந்தப்பட்ட மன்னர்கள் சர்க்காரிடம் சமர்ப்பித்துள்ளனர் என்றும், அது குறித்துச் சந்தேகப்படுவதற்குக் காரணமில்லையென்றும் அவர் கூறியிருக்கிறார்.

## உணவுத் தானியங்கள்

### மீது பாங்கிகள் தரும் கடன்

குறைந்துவிட்டதாகத் தகவல்

புதுடில்லி, செப். 9—

இந்த ஆண்டு மே திங்கள் முதல் ஆகஸ்டு வரை நெல், அரிசி ஆகியவைகளின் மீது பாங்கிகள் தந்துள்ள கடன், சென்ற ஆண்டு இதே காலத்தில் இருந்ததை விட ரூ. 15 கோடி குறைந்துள்ளதாம்.

மற்ற உணவுத் தானியங்கள் மீது தரப்பட்டுள்ள கடன் ரூ. 58 கோடி குறைவாக உள்ளதாம்.

மக்கள் சபையில் உதவி நிதி அமைச்சர் பகத், இதைத் தெரிவித்துள்ளார்.

## இந்திய இராணுவத்தில் 62 அன்னியர்!

புதுடில்லி, செப். 10—

கடற்படையில் 12 பேர், விமானப் படையில் 13 பேர், விதி அமுல் இலாகாவில் 26 பேர், நுணுக்க வளர்ச்சி இலாகாவில் 5 பேர், பாதுகாப்பு விஞ்ஞான நிறுவனத்தில் ஒருவர், அந்நிய மொழிப் பயிற்சி பள்ளியில் ஐவர்—ஆக மொத்தம் 62 அந்நியர்கள் இந்திய இராணுவத்தில் பணியாற்றிவருகின்றனர் என்று இந்திய பாதுகாப்பு துணை அமைச்சர் மேனன் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குப் பதில் இந்தியர்களை நியமிக்கத் தகுந்த ஆட்கள் இல்லையாம்!

## அணு ஆயுதபலம்

### இராணுவக் குறைப்புக்கு இடம் தருகிறதாம்!

லண்டன், செப். 9—

அணு ஆயுதங்கள் இருக்கின்றன என்பதால், அவற்றின் மீதுள்ள நம்பிக்கை காரணமாக பிரிட்டன், தனது இராணுவ வீரர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறதாம்.

சுமார் 4,000 அதிகாரிகளும், 5,000 வீரர்களும் படையிலிருந்து குறைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

## அம்பர் இராட்டை

### உற்பத்தியை தீவிரமாக்க தமிழ் நாட்டில் திட்டமாம்

சென்னை, செப். 8—

தமிழ் நாட்டில் அம்பர் இராட்டை உற்பத்தியைத் தீவிரப்படுத்த மாநில அரசு திட்டமிட்டிருக்கிறதாம்!

மாதந்தோறும் ஆயிரம் இராட்டைகள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இலட்சிய எல்லையாம்!

இந்த அம்பர் இராட்டை உற்பத்திக்கென ஆறு நிலையங்கள் கிண்டி (சென்னை); திருப்பூர் (கோவை); ஆரணி (வ. ஆ.); வடலூர் (தென். ஆ.); பேட்டை (நெல்லை); திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும், இவற்றில் உற்பத்தி தீவிரமாக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

# கோவையில் அரசாங்க அச்சகம்

மாநிலங்கள் சபையில் தகவல்

புதுடில்லி, செப். 9—

"கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்படவிருக்கும் புதிய அரசாங்க அச்சகம், லெட்டர் பிரஸ், போட்டோ லித்தோகிராபிக் ஆகிய முறைகளில் புத்தகம் அச்சிடுவது சம்பந்தமான வேலைகளை மேற்கொள்ளும். இந்த அச்சகத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நிலம் வாங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம், வெளிநாட்டு நாணயச் செலாவணி கிடைப்பதைப் பொறுத்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மொத்தம் ரூ. 1,36,88,000 ஆரம்பச் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது" என்று அமைச்சர் கே.சி. ரெட்டி, மாநிலங்கள் சபையில் கூறியுள்ளார்.

## புதுவை மாநில அதிகாரமாற்ற ஒப்பந்தம்

### பரிசிலனை செய்ய பிரான்சுக்கு நேரமில்லையாம்!

புதுடில்லி, செப். 9—

"புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய பிரெஞ்சிந்தியப் பகுதிகளை விட்டுத்தருவதற்கான 1956 மே 28-ந் தேதியுள்ள ஒப்பந்தம் பிரெஞ்சு தேசீய அசெம்பிளியால் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லையா? அப்படியானால் அது எப்போது அங்கீகரிக்கப்படக் கூடும்?"

என்று, மாநிலங்கள் சபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு வெளிவிவகாரத் துணை அமைச்சர் திருமதி லட்சுமிமேனன் பின்வருமாறு பதிலளித்தார்:—

"அந்த ஒப்பந்தத்தைப் பிரெஞ்சு தேசிய அசெம்பிளி இன்னும் அங்கீகாரம் செய்யவில்லை; பிரெஞ்சு மந்திரி சபைகள் அடிக்கடி மாறிவருவதாலும், பிரெஞ்சு சர்க்காருக்கு வேறு பல முக்கியப் பிரச்சினைகள் இருப்பதாலும் அதற்கானமசோதாவைக் கொண்டுவர முடியவில்லை; ஆனால் நாம், அதைச் சீக்கிரமாக அங்கீகரிக்கும்படி, கேட்டுக் கொண்டிருக்கிறோம்; பிரெஞ்சு தேசிய அசெம்பிளி நடைமுதல் ஆண்டு இறுதியில் இது குறித்து விவாதிக்கும்."

## பிரெஞ்சுப் பகுதிகள் மாற்றப்பட்டதால்!

புதுடில்லி, செப். 10—

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த புதுவை, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய பகுதிகள் இந்தியாவுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக, இந்திய அரசாங்கம் ரூ. 31,41,602·45 காசுகள் பிரெஞ்சு ஆட்சிக்கு வழங்கியுள்ளதாம்.

இதைத் தவிர, அந்தப் பகுதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கடனுக்கு ஈடாகச் சேரவேண்டிய வட்டிப் பணம் ரூ. 50,795·97 காசு என்று மக்கள்சபையில் பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

## சுதந்திரம் பெற்ற நாடுகள்!

1945-க்குப் பிறகு சுதந்திரம் பெற்ற நாடுகளில் மலேயா 18-வது நாடாகும்.

இதர நாடுகளாவன:—பிலிப்பைன்ஸ் குடியரசு, இந்தோனேசியா, ஜோர்தான், பர்மா, இலங்கை, தென்கொரியா குடியரசு, லாவோஸ், இந்தியா, லிபியா, கம்போடியா, பாகிஸ்தான், சூடான் வியட்நாம், இஸ்ரேல், மொராக்கோ, டுனீஷியா, கனா.

## சேலம் மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கட்கு:

சேலம் மாவட்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கச் செயலாளர் திரு. வி. இராமசாமி (ரெட்டியார்) தெரிவிப்பதாவது:-

"புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி விவாதித்து சர்க்காருக்குச் சிபாரிசு செய்வதற்காக சென்னை மாநில சட்டசபையினால் நியமிக்கப்பட்ட கல்விக் குழுவின் யோசனைப்படி புதிய பாடத் திட்டங்கள் ஆகஸ்டு 28-ந் தேதிய 'கெஜட்'டில் வெளியாகியுள்ளன. இதைப் பற்றி ஆசிரியர்களும், கல்வியில் அக்கறையுள்ளவர்களும், தங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சர்க்காருக்குத் தெரிவிக்கலாமென்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

"எனவே, எதிர்கால புதிய கல்வித் திட்டத்தை உருவாக்க கல்வியாளரும், பொதுமக்களும் ஆசிரியர்களும் இத்திட்டத்தைப் பற்றிய தங்களின் கருத்துக்களை 28—9—57-க்குள் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்.

முகவரி:—திரு. சி. பத்மநாபன், Special Officer for Revision of Syllabuses, Office of the Director of Public Instructions, Madras-6.

"சேலம் மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 18—9—57-க்கும் விவாதித்து செயலாளருக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். 22—9—57-ல் நடைபெற இருக்கும் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் விவாதிக்க, அவரவர் கருத்துக்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

# 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுவது போன்ற நிலைமை ஏன்?'

## 'ஒதுக்கப்படும் பணம் ஏழை மக்களுக்குப் பயன்பட வழிவேண்டும்'

### பி. எஸ். சந்தானம் எம். எல். ஏ. கோரிக்கை

"நம்முடைய சர்க்காரின் ஆதரவினால் நடைபெறும் பஞ்சாயத்து சபைகளும், சில நகரசபைகளும் சர்க்காரிடமிருந்து மானியமாகப் பெறும் பணத்தை நல்முறையில் செலவழிப்பது இல்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"உதாரணமாக திருவண்ணாமலை நகரசபையை எடுத்துக் கொண்டால், அங்கு அமைந்திருக்கிற ஐந்துவிதமான சேரிகளில் ஒன்று பெரிய சேரி. குறைந்தது 400 வீடுகள் இருக்கின்றன; இரண்டாவது கீழ்நாத்தூர் சேரி அங்கும் 250 குடும்பங்களுக்கு அதிகமாக இருக்கும்; மூன்றாவது சமுத்திரம்சேரி — 300 வீடுகள் அங்கே இருக்கும்; நான்காவது கல்சேரி—அதிலும் 300 வீடுகள் இருக்கும்; ஐந்தாவது, அருந்தியர்சேரி.

"இந்த ஐந்து சேரிகளிலும்வாழ்கின்றவர்கள் தாழ்த்தப்பட்ட பாமரமக்கள்; சர்க்காரையே நாடி வாழக்கூடியவர்கள்; செல்வந்தர்களை நாடிப் பிழைக்கக்கூடியவர்கள். இவர்கள் வாழ்கின்ற சேரிகளில் நல்லவிதமான பாதைகள் இல்லை. இவர்களுக்குச் சுகாதார விதிகளிலிருந்தே விதி விலக்குக் கொடுத்துவிட்டார்கள்!

"400 குடிமக்கள் வாழக்கூடிய பெரிய சேரியில் இரண்டு குழாய்கள்தான் இருக்கின்றன. சாதி இந்துக்கள் வாழக்கூடிய பகுதியில் ஒவ்வொரு சாதி இந்து! வீட்டிலும் கிணறு இருக்கின்றது; விசாலமான இடம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் வாழக்கூடிய சேரியில் ஜனநெருக்கம் அதிகம்; கிணறு வசதியோ, வீட்டு வசதியோ கிடையாது. காலையில் எழுந்தவுடன் வாழ்க்கையை வளப்படுத்தக் கூலி வேலைக்குப் போய் விடுகிறார்கள். மாலையில் வந்தால் தண்ணீர்ப் பஞ்சம்; ஏறத்தாழ நாலாயிரம்பேர்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்றால், சிலருக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது; மற்றவருக்குத் தண்ணீர் இல்லை இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

"ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் நகராண்மைக் கழகங்களுக்கு வரும்போது அவர்கள் வாசித்தளிக்கிற வரவேற்புப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு வந்துவிடுகிறார்களே தவிர, அந்தப் பகுதியில் வாழ்கின்ற பாமர மக்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய சேரிகளைப் பார்வையிட்டதை நான் பார்த்து அறியேன்.

"சுதந்திரம் கிடைத்து, பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு பல கோடிப் பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். அந்தப் பணம், நல்லதொரு முறையில் செலவிடப்படுகிறதா என்பதை ஆங்காங்கே சென்று பார்ப்பது கிடையாது இவர்கள் போய்ப் பார்வையிடுகிறார்கள் என்கிற நிலைமை இருந்தால்தான், பணத்தை அதிகாரிகள் சரியாகச் செலவழிப்பார்கள். சர்க்கார் பஞ்சாயத்துகளுக்கு ஆயிரக்கணக்கானபணத்தை ஒதுக்கினாலும்கூட அவர்கள் சேரியில் வாழ்பவர்களுக்கு யாதொரு திட்டமும் செய்வது கிடையாது; ஆனால், கணக்கில் எழுதிவிடுகிறார்கள்; 'புலிக்குப் புல் வாங்கிப் போட்டோம்; யானைக்கு அல்வா வாங்கிப் போட்டோம்' என்ற முறையில் அவர்கள், சர்க்கார் ஒதுக்குகின்ற பணத்திற்கு எல்லாம் எதையோ கணக்கு எழுதிக் காட்டிவிடுகிறார்களே தவிர, சேரியில் வாழ்பவர்களுக்கு அதனால் எவ்வித உபயோகமும் ஏற்படவில்லை. இதற்குப் பல உதாரணங்கள் சொல்லமுடியும்.

குறிப்பாக செங்கம் தாலுகாவைச் சேர்ந்த கரியமங்கலம் கிராமத்தில் ஏறக்குறைய 150 ஆதித்திராவிட குடிமக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்களுக்கு நல்லதொரு பாதை கிடையாது. பஞ்சாயத்து போர்டு வீதியின் நடுவில் கல் கிடக்கிறது; ஏழை பாமர மக்கள் கேட்டால் 'நீங்கள் உடைத்துக் கொள்ளுங்களேன்' என்று சொல்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்து போர்டுக்கு வருகிற பணம் என்ன ஆகிறது? அதற்குத் தகுதியான சமாதானம் சொல்வதற்கு ஆள் இல்லை! ஆகையால் ஸ்தல ஸ்தாபன மந்திரி நகராண்மைக் கழகங்களுக்குப் போகும்போது அங்குள்ள சேரிகளையும், பார்வையிட்டு, அபிவிருத்தி வேலைகள் எல்லா சேரியிலும் செய்யப்பட்டு வருகின்றனவா என்று கவனிக்க வேண்டும். உண்மையில் அப்போதுதான், 'இது ஏழையின் சர்க்கார்—பாமர மக்களுடைய சர்க்கார்—மகாத்மா காந்தி அரிசன மக்கள் முன்னேற வேண்டும் என்று சொன்ன கொள்கையைக் கடைப்பிடிக்கும் சர்க்கார்' என எல்லோராலும் போற்றப்படும் தகுதியைப் பெறுவர். அதைவிட்டு, 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுவதுபோல' இவர்கள், அரிசனங்களுக்கென கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்க, அப்பணம் பிற்பட்ட மக்களுக்குப் பயன்படாமல்போவது நல்லதல்ல. தாழ்த்தப்பட்ட மக்கள் நன்மை அடையத்தக்க வகையில் காரியங்கள் நடைபெற வேண்டும்; சேரிவாழ் மக்கள் சுகாதார வசதிகளோடு நல்ல விடுதிகளில் வாழ வகை செய்யவேண்டும். நகராண்மைக் கழகங்கள் 'சேரியில் வாழ்கின்ற மக்களின் நலனில் அக்கறை கொண்டு திட்டங்களை வகுக்கச்செய்ய வேண்டும்.

"திருவண்ணாமலை தாலுகாவில் வேடநத்த கிராமத்தில் பாதை அமைக்க ஒரு ஆண்டுக்கு முன்னரே சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறது; நாளதுவரையில் அந்த வேலை நடைபெறவில்லை. நானும்கூடச் சென்று கேட்டேன். அவர்கள் ஏதோ சமாதானம் சொல்கிறார்கள்; நடவடிக்கை எடுக்கவில்லை.

"சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறது — பஞ்சாயத்து 'போர்டு'கள் இருக்கக்கூடிய இடங்கள்தான் 'பிளாக் டெவலப்மெண்ட் ஏரியா'வாக எடுத்துக் கொள்ளப்படும்—என்று! திருவண்ணாமலை தாலுகாவில் பெரிய களம்பாடி கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஏறக்குறைய 300 சாதி இந்துக்களும் 100 தாழ்த்தப்பட்ட மக்களும் வசிக்கிறார்கள். அங்கே பஞ்சாயத்து நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாகப் பல விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. நான், மாவட்ட கலெக்டருக்கும், அரசாங்கத்திற்கும் எழுதி இருக்கிறேன்; நாளது வரையில் கவனிக்கவில்லை.

"தாணியப்பாடி பிர்க்காவை எடுத்துக்கொண்டால் அது மலைப் பிரதேசம்—காட்டுப் பிரதேசம்; நடப்பதற்குக்கூட தகுந்த பாதை கிடையாது; ஏரி கிடையாது; நஞ்சைப் பயிர் சாகுபடி செய்ய வசதி கிடையாது. அங்கே ஏதாவது வசதியைச் செய்துகொடுக்க வேண்டுமானால், 'செஸ்' பணம் குறைவாய் இருக்கிறது. வருவாய்க்கே வசதி இல்லை; இம்மாதிரி இடங்களுக்கு சர்க்கார்தான் அதிகப் பணம் ஒதுக்கி, வருவாய் குறைவாக இருந்தாலும் அதிகமாக மக்கள் இருப்பதைக் கவனித்து பல வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

"ஆகவே, சர்க்கார் கொடுக்கின்ற பஞ்சாயத்து போர்டு 'செஸ்' பணத்திலிருந்து பஞ்சாயத்து போர்டு பகுதியில் இருக்கக்கூடிய சேரிகளுக்கு எவ்வளவு தொகை அவசியமோ அதைக் கொடுத்து உதவி செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் ஏழை அரிசன மக்களுக்கு நல்ல வசதிகளைப் பெறவாய்ப்புகிடைக்கும்."

குறிப்பு:—இக்கோரிக்கை, சட்டசபையில், வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது எழுப்பப்பட்டவையாகும்.

## சேலம் நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

சேலம், செப் 6—

சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 5-ந் தேதி இரவு நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இம்மாதம் 22-ந் தேதி 'திராவிட நாடு விடுதலை வாரம்' கொண்டாட முடிவு செய்யப் பட்டது.

சேலம் நகரில் உள்ள 32 கிளைக் கழகங்களும் சிறப்பான முறையில் தோரணங்கள் கட்டி, அலங்கரித்து, இனிப்புகள் வழங்கி 'திராவிட நாடு விடுதலை வார'த்தைக் கொண்டாடவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பீடித் தொழிலாளரின் அறப்போர் வாபஸ் பெறப்பட்டபின் சேலம் நகரில் ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 700 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடுவதால் இது சம்பந்தமாகப் பரிகாரம் தேட கூடப்படவிருக்கும் சர்வகட்சி கூட்டத்திற்கு தி.மு.கழகத்தின் பிரதிநிதிகளாக சித்ரூளி ஏ. சுப்பிரமணியம், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகிய இருவரையும் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

கழகப் பணிமனையில் வாசகசாலை ஒன்று திறக்க முடிவு செய்யப்பட்டது. (ந—தி)

# மலைப் பகுதி மக்கள் படும் அவதி!

## 'துடைப்பதற்கு சர்க்கார் முன்வர வேண்டும்'

### ஆனந்தன் எம்.எல்.ஏ. கோரிக்கை

"தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர் தாலுகா அதிகாரிகள் மக்களுடைய குறைகளைச சரிவரக் கவனிப்பதில்லை.

"கச்சாராபாளையம் அஞ்சல், மாயம்பாடி, பொட்டியம் என்ற மலைப்பகுதியில் இஞ்சி, சந்தனம், தேக்கு மரம் மூங்கில், மற்றும் பலவித உணவுப் பொருள்கள் விளைகின்றன.

"இவற்றை விளைவிக்கும் மலைசாதி மக்கள், அந்தப் பொருள்களை விற்கச் சென்றால் அந்த ஊர் ஜமீன்தார், தான் கேட்கும் விலைக்குப் பொருள்களைக் கொடுக்கும்படி வற்புறுத்துவார்; அவர் கேட்ட விலைக்குக் கொடுக்காவிட்டால் ஏழை விவசாயிகளுக்கு ரூ. 100—200 என அபராதம் போட்டு வாங்கிக்கொள்கிறார்.

"அங்கு விளையும் கடுக்காய் ஒரு மரக்கால் ரூ. 2 மதிப்பென்றால், ஜமீன்தார் கொடுப்பது 4 அணாதான்! உணவுப் பொருள் மூட்டை ரூ. 20 விற்றால் அவர் கொடுப்பது ரூ. 15-தான்! இப்பொருள்களை விலை கேட்டபடி கொடுக்கத் தவறியவர்களையும், மலைசாதி மக்களையும் அங்குள்ள நிலங்களில் பயிர் செய்யமுடியாது என்று தடுத்துவிடுகிறார்கள்.

இந்தக் குறைகளை கச்சாராபாளையம் போலீஸ் அதிகாரியிடம் சொன்னால் கவனிப்பதில்லை.

"அந்த மாயம்பாடி தொகுதியில் சுமார் 10,000 மலைஜாதி மக்கள் வாழ்கிறார்கள்; அவர்கள் 'ஓட்' போட வருவதில்லை. காரணம் சரியான பாதை வசதிகள் இல்லாமைதான்.

"சங்கராபுரம் பிர்க்கா புதுபட்டு அஞ்சல், சொடியனூர், புளியாங்கொட்டை, ஆனைமடுவு, பவுஞ்சிபட்டு, மற்றும் அந்த வட்டாரத்தில் உள்ள மலைஜாதி மக்களுக்கும் அரிஜன மக்களுக்கும் பாதை வசதியும், குடியிருக்க மனையும், குடிதண்ணீர் கிணறும் அங்கு இருக்கும் அதிகாரிகள் சீர்செய்து கொடுப்பதில்லை, இனி அந்த வட்டாரத்தை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அங்கும் 8000 வாக்காளர்கள் இருக்கிறார்கள்; ஆனால், சரியான சாலை இல்லாததால் வாக்களிக்க வருவதில்லை.

"எனவே, இங்கெல்லாம் பாதை அமைக்கவும், மின்சார வசதியை கிராமங்களுக்கும் விரிவாக்கி ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யவும் வேண்டும்.

"ஏழை விவசாயிகளும் அரிசன மக்களும் கடனுக்காகக் கொடுக்கும் விண்ணப்பங்களை அங்கிருக்கும் அதிகாரிகள் ஆறு மாதம் தாழ்த்திப் பிறகுதான் கொடுக்கிறார்கள்; அதிலும் ரூ. 200 கோரினால் கொடுப்பது ரூ. 175 தான்; 'பாக்கி ரூ. 25 எங்கே' என்று கேட்டால் 'இலஞ்சம் சாப்பிடுகிறது' என்று அந்த ஏழைமக்கள் கூறுகின்றனர். அங்கிருக்கும் அதிகாரிகள் இந்த நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கம் இவற்றை நல்லமுறையில் சீர்திருத்துமாறு கோருகிறேன்.

"கள்ளக்குறிச்சி மாவட்டம் வெப்பப் பிரதேசம்; ஆகையால் அங்கு அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால் மக்கள் பொருள் சேதம் அடைந்து மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எரிந்த வீடு ஒன்றுக்கு சர்க்கார் ரூ. 39 கொடுப்பதாகச் சொல்லி, தற்சமயம் ரூ. 10-தான் கொடுத்திருக்கிறார்கள். இனியாகிலும் அரசாங்கம் வீடு 1-க்கு ரூ. 50 வீதம் தருமாறும், கள்ளக்குறிச்சியில் தீயணைக்கும் படை ஏற்படுத்தவும் கோருகிறேன்.

"அங்கிருந்து காலாகாலமாக அரசாங்கத்திற்கு உழைத்துவரும் தோட்டி—தலையாரிகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் சம்பளம் ரூ. 18-தான்; அவர்களுக்குத் தினப்படி அணா 10-தான் அலவன்ஸ் வைத்துக்கொண்டு இந்த ஊழியர்கள் 'இருகால வாய்தா' பணம் எடுத்துக்கொண்டு தாலுகா அலுவலகங்களுக்குச் சென்றால் 'பஸ்' செலவுக்கே சரியாகிவிடுகிறது; சாப்பாட்டுக்கோ வேறு இதர செலவுகளுக்கோ பணம் கிடையாது. இனி இந்த அரசாங்கம் தோட்டி — தலையாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ. 30 சம்பளமும், இதர ஊழியர்களுக்குத் தரும் அளவுக்குப் 'படி'யும் வருடம் இருமுறை ஆடையும் கொடுக்கவேண்டுகிறேன்.

"கள்ளக்குறிச்சி வட்டாரத்திலுள்ள எஞ்சினீயர்கள் சிறு சிறு கால்வாய்த் திட்டங்களைச் சரிவரக் கவனிப்பதில்லை; அவற்றை உடனடியாகக் கவனிக்குமாறு அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும், நீர்ப்பாசன வசதிகளைச் செய்துதருமாறு உத்தரவிடுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

"வட ஆற்காடு சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து வேப்பூர், நாராயணகுப்பம், போந்தை, நாககொல்லை, லக்கிநாய்க்கன்பட்டி, ரங்கப்பனூர், பாவளம், மல்லாபுரம், அரசம்பட்டு, கொசப்பாடி, செல்லம்பட்டு, காடிசித்தூர், கள்ளக்குறிச்சி ஊர்களின் வழியாகச் செல்லும்படியாக ஒருகால்வாய் வெட்டி நீர்பாசன வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"அங்கு வசிக்கும் தாழத்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கின வகுப்பினருக்கும். அரசாங்கம் கல்வியும், குடியிருக்க மனையும், குடி வசதியும் கிணறும் உடனடியாக செய்து கொடுத்து அவர்களை முன்னேற்றமடையச் செய்யுமாறு கோருகிறேன்"

குறிப்பு:—இக்கோரிக்கை, சட்டசபையில், வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது எழுப்பப்பட்டவையாகும்.

## ரூ. 3 விலையுள்ள புகை ஏற்படாத அடுப்புகள்!

புதுடில்லி, செ. 9—

புகை ஏற்படாத அடுப்புகளை மக்களிடையே பிரபலப்படுத்துவதற்காக இந்த ரக அடுப்புகளின் பல்வேறு மாதிரிகள் மாநில சர்க்கார்களுக்கும் பயிற்சி நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும், இந்த ரக அடுப்புகளை கிராமங்களிலுள்ள கைவினைஞர்களே தயாரித்து விடுகின்றனர் என்றும், ஒரு அடுப்பின் விலை சுமார் ரூ. 3 என்றும் மாநிலங்கள் சபையில் அமைச்சர் எஸ். கே. டே கூறியுள்ளார்.

# ‘காந்திக்கு ஈடாக மக்கள் உள்ளத்தைகவர்ந்தவர் கலைவாணர்’

## ‘விடுதலை வீரர்கள் பட்டியலில் இடம்பெறக்கூடியவர்’

### இரங்கல் கூட்டத்தில் க. அன்பழகன் பேச்சு

6—9—57 மாலை, சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கலைவாணர் என். எஸ். கே. அனுதாபக் கூட்டத்தில் பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ; அவர்கள் ஆற்றிய இரங்கலுரையின் சுருக்கம் வருமாறு :—

“கலைவாணரின் முகமும், தோற்றமும், பணியும் நாட்டு மக்களைக் கவர்ந்தன. அவரது மறைவுச் செய்தியைக் கேட்டு நாடே அதிர்ச்சியுற்றது. அவர் மறைந்தார் என்ற செய்தி, இங்கிருந்து 200 மைலுக்கப்பாலிருந்த எனக்குக் கிடைத்ததும் திடுக்கிட்டேன். உடன் வந்து அவரது உடலைக்காண முடியாமற் போயிற்று. இன்னும் 400, 500 மைல்களுக்கப்பாலிருந்த மக்களெல்லாம், இச்செய்தி கேட்டு மீளமுடியா துக்கத்தில் ஆழ்ந்து தவித்தனர். இந்த அளவுக்கு ஒரு மனிதர் நாட்டுமக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்ததற்குக் காரணம் என்ன?

“எவரும் இதுவரை பெற்றிராத அளவுக்கு அவர், நாட்டு மக்களின் செல்வாக்கைப் பெற்ருர். அவருடைய செல்வாக்கைக் கண்டு, அரசியல் துறையிலுள்ள தலைவர்கள்கூட, பொருமைப்பட்டே தீருவர். அந்த அளவுக்கு ஈடும் இணையுமற்ற கலைஞராய்—சிந்தனைச் சிற்பியாய்—சிந்தனைக் கருவூலமாய்த் திகழ்ந்தார் நம் கலைவாணர் என். என். கிருஷ்ணன். இனி இப்படிப்பட்ட ஒருவரைக் காணமுடியாது.

“உத்தமர் காந்தியடிகள் இறந்த நேரத்தில் நாட்டு மக்கள், அனலில்பட்ட மெழுகுபோல, உருகினர். அதேபோலவே, இப்பொழுது நம் கலைவாணர் இறந்தபோதும் மக்கள் உருகினர்.

“காந்தியாராவது ஒரு அரசியல் தலைவர். இந்நாட்டுக்கு அரசியல் சுதந்தரத்தைப் பெற்றுத் தந்தவர்; நம் கலைவாணரோ சாதாரண நாடகக்காரர்தான். காந்தியார் 80 வயது வரை வாழ்ந்து மறைந்தார்; கலைவாணரோ 50 வயதைக் கூட எட்டிப்பிடிக்காமல் இறந்துவிட்டார். இந்த நிலையில்—காந்தியரோடு ஒப்பிடக்கூடிய நிலையில் கலைவாணருக்கு மக்கள் மரியாதை செலுத்தினர் என்றால் இதற்குக் காரணம் என்ன?

“நம் கலைவாணர் அவர்கள் நாட்டு மக்களை நடிப்புக்கலைமூலம் கவர்ந்தார்; பழைய புராணக் கதைகளானாலும் அவற்றில் நடிக்கும்போது, அவற்றில் புதுக்கருத்துக்களை நுழைத்து, புதுமெருகுடன் நடித்தார். நாடகமூலம் நாட்டில் விடுதலை உணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்கு அவர் அரும்பாடுபட்டார்.

“இந்த நாட்டின் விடுதலை வீரர்கள் பட்டியலிலே அவருக்கு நல்ல இடமுண்டு; தன்மான உணர்ச்சியையூட்டித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பியவர்கள் பட்டியலிலே அவருக்கு இடமுண்டு; நாடகக் கலைஞர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்கள் பட்டியலிலே அவருக்கு முதலிடம் உண்டு.

“கலைவாணர் அவர்கள் எதையும் நன்கு சிந்தித்துச் செயலாற்றக்கூடியவர். தனக்கு எழும் சந்தேகங்களை, தம் நண்பர்களுடன் உரையாடும்போது அ[illegible]களிடம் கூறி, விவாதித்து மு[illegible]வு காணக்கூடியவர். பிறர் சொல்வதைப் பலதடவை சிந்தித்து, அதன்பின் தானே ஒரு முடிவுக்கு வருவார்; தன் முடிவைப் பிறருக்கு[illegible] எடுத்துச் சொல்வார்.

“இப்[illegible] ஒரு அறிவாளை நாம் இழந்திருக்கிறோம். இனி அவரைக் காண முடியாது; அவரைப் பின்பற்றி, அவரது குறிக்கோள்கள் நிறைவேறப் பாடுபடுவோமாக.”

## பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம்

### கேரள சர்க்கார் உத்தேசம்

திருவனந்தபுரம், செப். 10—

கேரள மாநிலப் பஞ்சாயத்துக்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கும் நோக்குடன் சர்க்கார், ஒரு மசோதா தயாரித்து வருவதாக ஸ்தல நிர்வாக இலாகா மந்திரி பி. கே. சாதன் தெரிவித்திருக்கிருர்.

பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களை விரிவாக்குவதை ஒட்டி, அவற்றின் நிதி நிலைகளையும் எப்படி அபிவிருத்தி செய்வது என்பதுதான் முக்கியமாகப் பரிசீலிக்கப்படவேண்டிய அம்சம் என்றும் அவர் கூறியிருக்கிருராம்!

சர்க்காரின் பல இலாகாக்களும் இப்போது நிறைவேற்றி வரும் பல திட்டங்களையும், வேலைகளையும் இந்தப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பது பற்றியும் வரி வசூல் வேலையையும் இவற்றிடம் ஒப்படைப்பது பற்றியும் சர்க்கார் யோசித்து வருவதாகவும் அந்த மந்திரி தகவல் தந்திருக்கிருர்.

## கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

★

“சில பொதுக் கூட்டங்களுக்கும், திருமணங்கட்கும், என் அனுமதியின்றி எனது பெயரையும் சேர்த்து விளம்பரம் செய்துவிட்டு. பின்னர் நான் வரவில்லையெனக் குறைபட்டுக் கொள்கிருர்கள். அன்புகூர்ந்து இனி, என் அனுமதியின் பேரிலேயே என் பெயரை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்”

எனத் தோழர் பொன். சொக்கலிங்கம் தெரிவித்துக்கொள்கிருர்.

## நெல்லை மாவட்ட

### தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

★

15—9—57 காலை 10-30 மணியளவில், மேலப்பாளையம் தி. மு. கழக அலுவலகத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

ஆய்வுக்கு வரும் பொருள்கள்: வரவு-செலவுக் கணக்கு சரி பார்த்தல்; துணைச்செயலாளரிடமிருந்து வரவு-செலவுக் கணக்கையும், கழக ரிக்கார்டுகளையும் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளுதல்; மாவட்ட மாநாடு நடத்துவது பற்றி முடிவெடுத்தல்; மற்றும் செயலாளரால் கொண்டு வரப்படும் தீர்மானங்கள்.

மாவட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் தவருது வந்து கலந்துகொள்ளுமாறு நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் வேண்டிக்கொள்கிருர்.

## சுப்பிரமணியபுரத்தில் அண்ணு அவர்கள்

### கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் : 14—9—57

மாலை 2 மணிக்கு: சுப்பிரமணியபுரம் துவக்கப்பள்ளியின் புதிய கட்டிடத் திறப்பு விழா.

மாலை 4 மணிக்கு: சுப்பிரமணியபுரம் ஊராட்சிமன்ற வரவேற்பு.

மாலை $6\frac{1}{2}$ மணிக்கு: சுப்பிரமணியபுரம் தி. மு. க. கிளை துவக்க விழாப் பொதுக்கூட்டம்.

குறிப்பு:— சுப்பிரமணியபுரம், அறந்தாங்கி — கோட்டபட்டினம் பஸ் மார்க்கத்தில் நாகுடி அருகிலும், இரயில் மார்க்கத்தில் ஆயிங்குடி ஸ்டேஷன் அருகிலும் இருக்கிறது.

## கழகக் கூட்டம்

★

**சோழபுரம்:**

பந்தடி மைதானத்தில் 13—9—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். ஏ. முகம்மது கனி

பேசுவோர்:

கி. மனோகரன்
பொ. தருமன்
ஏ. எஸ். பக்கிரி முகம்மது

மாலை 5 மணியளவில் ஊர்வலம் உண்டு.

### சங்கரன்கோவில் பகுத்தறிவு மன்றத் தேர்தல்

13—9—57 இரவு 8 மணியளவில் சங்கரன்கோவில் பகுத்தறிவு மன்றப் புதிய நிர்வாகிகள் தேர்தல் திருவேங்கடம் சாலைத் தெரு 20/7 என் இல்லத்தில் நடைபெறும். நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

# போலீஸ் தலைமை அதிகாரி மீது குற்றச்சாட்டுகள்

## நடவடிக்கைக்கு அவசியம் இல்லை என சர்க்கார் அறிவிப்பு

சென்னை, செப். 10—

“போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல்’மீது சட்டசபையில் எழுந்த குற்றச்சாட்டுக்களைக் குறித்து விசாரணை நடத்திய நீதிபதி பி. என். இராமசாமி அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டு, நடவடிக்கை எடுக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

கடந்த ஜுலை 16-ந் நாளன்று போலீஸ் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றபோது, நமது தி. மு. கழக சட்ட மன்றக் கட்சித் துணைத் தலைவர் தோழர் க. அன்பழகன் அவர்கள், உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் பற்றிப் பொதுவான சில குற்றச்சாட்டுக்களை எழுப்பியிருந்தார். அதன்மீது சர்க்கார் விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர் என்பது தெரிந்ததே.

நீதிபதி தனது அறிக்கையில், குற்றசசாட்டுக்களை நால்வகைப் படுத்தி விசாரித்து, தமது அறிக்கையில், அவை ஆதாரமற்றவை எனத் தீர்ப்புக் கூறியிருக்கிருர்.

ஒவ்வொன்றும் ரூ. 4 அல்லது 5 இலட்சம் பெறுமானதாக, நான்கு வீடுகளை, அந்தப் போலீஸ் அதிகாரி கட்டியிருப்பதாகக் கூறப்பட்டதுதான், பிரதானமான குற்றச்சாட்டாகும்.

இதுபற்றி, நீதிபதி, தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

“கட்டப்பட்ட வீடுகள் இரண்டுதான்—நான்கல்ல; அவற்றைக் கட்டுவதற்காக ரூ. 1,38.716-12-0 மட்டுமே செலவாகியிருக்கிறது. இதற்குச் சரியான கணக்குகளும் காப்பட்டிருக்கின்றன.”

இதனல், குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனக் கருதப்பட்டு, நடவடிக்கை எதும் எடுக்க உத்தேசிக்கப்படவில்லை.

## ஐ. நா. சபைமுன் ஆர்ப்பாட்டம்

### ‘செயலில் இறங்கவேண்டும்’ என வற்புறுத்தல்

நியூயார்க், செப். 10—

அங்கேரி புரட்சிபற்றிய ஐ. நா. அறிக்கையை, ஐ. நா. பொதுச் சபையில் விவாதிக்க ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், அங்கேரியிலிருந்து நாடு கடத்தப்பட்ட 2,000 பேர் ஐ. நா. கட்டிடத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்; ‘ஆராய்ந்து பயன் என்ன? உடனே செயலில் ஈடுபடுங்கள்’ என்று பொறித்துள்ள கொடிகளையும், ‘சிறிய நாடுகளை ஐ. நா. பாதுகாக்கிறதா, விற்பனை செய்கிறதா?’ என்று கேட்கும் கொடிகளையும் அவர்கள் ஏந்திக்கொண்டிருந்தனராம்!

## அங்கேரி பற்றிய விசாரணைக்குழு அறிக்கை

### ஐ.நா. பொதுச்சபையில் விவாதம்

நியூயார்க், செப். 10—

அங்கேரிபற்றிய ஐ. நா. தனிக்குழுவின் அறிக்கையைப் பரிசீலிப்பதற்காக ஐ. நா. பொதுசசபை இன்று கூடியது.

ஐ. நா. சாசனத்தை, ரஷ்ய—அங்கேரி ஆட்சியாளர்கள் மீறுவதாகக் குற்றஞ்சாட்டியும், ஐ. நா.-வின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபைத் தலைவர், மாஸ்கோ மற்றும் புதாபெஸ்ட் நகரங்களுக்குச் செல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும் 36 நாடுகள் தந்துள்ள தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சபைத் தலைவர், குழுவின் பணியைப் பாராட்டினர்.

பின்னர், பிலிப்பைன்ஸ் நாட்டின் ஆஸ்திரேலியத் தூதுவராயிருப்பவரும் குழுவின் இணைப்பாளராயிருந்தவருமான கெய்த் ஷான், குழுவின் அறிக்கையை சபையில் தாக்கல் செய்தார்.

அவர் பேசி முடித்ததும், அங்கேரியின் நிரந்தரப் பிரதிநிதி எழுந்து, குழுவினர், அங்கேரியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முயற்சிப்பதின் மூலம் ஐ. நா. சாசனத்தை மீறுவதாக குற்றம் சாட்டி, ஐ. நா. பொதுச் சபை இந்த விவகாரம் குறித்து விவாதிக்கவே கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்திருக்கிருர்.

## காசிம் ரஜ்வி விடுதலை

### சிறையில் குரான் விமர்சனம் எழுதினராம்

பூனு, செப். 10—

ஐதராபாத் ரஜாக்கர் தலைவரான காசிம் ரஜ்வி, இன்று காலை ஏர்வாடா மத்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

பீபிநகர் கொள்ளைவழக்கு சம்மந்தமாக 1948-ம் ஆண்டு கைது செய்யப்பட்ட ரஜ்வி, 1950-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் விசேட நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் மூலம் ஏழாண்டு சிறைத் தண்டனை பெற்றிருந்தார். ஐதராபாத் சிறையிலிருந்த அவர், 1954-ம் ஆண்டு, இங்கு கொண்டு வரப்பட்டிருந்தார்.

#### பாகிஸ்தான் செல்வார்

விடுதலையான அவர், கூடியிருந்தோரிடை பேசுகையில், ஐதராபாத் சென்று அங்கு தனது வேலைகளைச் சில நாட்களுக்குள் முடித்துவிட்டு, பாகிஸ்தான் சென்றுவிடப்போவதாகத் தெரிவித்தாராம்.

#### குரான் விமர்சனம்

தான் கடந்த ஏழு ஆண்டுக் காலமும் தன்னந் தனியாகவே சிறை வைக்கப்பட்டிருந்ததாகவும், உலகப் போக்கு எதுவுமே தனக்குத் தெரியாது என்றும் கூறியதுடன், சிறையில் தான் ஏராளமாகப் படித்ததாகவும், குரான் படிப்பதில் பெரும் பகுதி சிறை வாழ்வைக் கழித்ததாகவும், குரான்பற்றி விமர்சனம் ஒன்று எழுதியிருப்பதாகவும், சீக்கிரமே அதனைத் திருத்தி வெளியிடப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.


## ‘நம் நாடு’ இதழ் விற்பனையாளர் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் ‘நம் நாடு’ இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க.

பூதலூர்
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம்வட்டம்)

—நிர்வாகி: ‘நம் நாடு’


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை என் : 8/57

# திராவிட நாடு விடுதலை வாரம்

## செப்டம்பர் 17-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி [illegible]ங்கரங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிருேம். [illegible]பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீரவணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிருேம்.

அன்பன்,

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

4—9—57
‘அறிவகம்’
சென்னை-13

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் [illegible]